

தனி பிரதி
ரூ.10/-

PORIYIYAL KADHIR




# பொறியியல் கதிர்


கதிர் 44 | பாரிப்பு 9 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மே 2013


# மே தின வாழ்த்துக்கள்



## உழைக்கும் வர்க்கம் உயர்ந்தால்
## உண்மையில் தேசம் உயரும்


நூற்றாண்டு விழா சங்கம்

தோற்றம்
1910

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

**TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD**

நூற்றாண்டு
2010

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை – 5.

அரசு ஆணை எண்.Ms.822 நாள்: 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது.

# நமது பொறியாளருக்கு வாழ்த்துக்கள்



பெயர் : **பொ.பா.மோகன்**, D.C.E., B.E.,

பிறந்த நாள் : 10.05.1955

சொந்த தாலுக்கா - மாவட்டம் : சேலம் / சேலம்

படிப்பு :

1. பட்டயப் படிப்பு : D.C.E., (04/1974) தியாகராஜர் பாலிடெக்னிக், சேலம்.
2. பட்டப் படிப்பு : B.E., (19.12.1981) அரசு பொறியியல் கல்லூரி, சேலம்.

---

14.10.1974 முதல் 20.01.1975 வரை - சர்வே அசிஸ்டண்ட்

24.05.1975 முதல் 30.06.1975 வரை - கூடுதல் வறட்சி நிவாரண ஓவர்சீயர்.

17.12.1975 முதல் 16.07.1981 வரை - வரைவாளர் நிலை III

17.07.1981 முதல் 31.01.1982 வரை - வரைவாளர் நிலை II

01.02.1982 முதல் 14.12.1999 வரை - இளநிலைப் பொறியாளர் / உதவிப் பொறியாளர்.

15.12.1999 முதல் 30.06.2008 வரை - உதவிச் செயற்பொறியாளர்.

01.07.2008 முதல் 29.04.2013 வரை - செயற்பொறியாளர்.

29.04.2013 முதல் - - இணைத் தலைமைப் பொறியாளர் (O&M).

இவர் கண்காணிப்புப் பொறியாளர் பதவி வரை பதவி உயர்வு பெற்றது தானாக நடைபெற்ற செயல் அல்ல. தன்னுடைய உரிமைக்காக 1982 ஆம் ஆண்டு தொடங்கி 2013 வரை, அதாவது 30 ஆண்டுகள் அயராமல் தொடர்ந்து போராடி **"உண்மை என்றும் வெல்லும்"** என்பதை உறுதி செய்துள்ளார்.

இணைத் தலைமைப் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற நமது பொறியாளருக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

# Wedding Invitation

**Mrs. J.Josephine Rani**
**&**
**Mr. L. Philomin Raj,**
(Assistant Executive Engineer, PWD)

*Request the pleasure of your esteemed presence with family and friends on the occasion of the marriage of their daughter*

Selvi. **P. CATHERINE LYDIA @ REENA, B.Tech.,**

with

Selvan. **L. PETER FRANCIS, B.Tech.,**
(S/o.Mrs.L.Irudhaya Mary and Mr.M.Lourdhusamy)

on Wednesday, the 15th May 2013, Between 9.30 am and 10.30 am at **St. Fathima's Church,** Puthur, Trichy -17.

**PROGRAMME**

**15-05-2013, Wednesday**
**Lunch (11 am onwards)** : **Sowbhagya Hall, Hotel Ramyas, Near Central Bus Stand, Trichy-1.**

**25-05-2013, Saturday**
**Reception (6.30 onwards)** : **Siranjeevi Hall, No.27/1, Jawaharlal Nehru Road, (Inner Ring Road) Koyambedu, Chennai - 600 107.**

***With best compliments from: Friends & Relatives***

**L.Philomin Raj,** D.C.E.,
C-2, Sahithyam (DABC) Apts.,
364/1, Church Road,
Mogappair East, Chennai - 600 037.
Cell: 94440 65590

பொதுச் செயலாளர் மடல்

மடல் – 9(2012-2013)

## தொடரும்

## நம் பயணம்......



### அன்பார்ந்த பொறியாளர் சகோதரர்களே! வணக்கம்!

கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றுள்ள நமது உறுப்பினர் பொறியாளர் பொ.பா.மோகன் அவர்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

21, 22.04.2013 ஆகிய தேதிகளில் டெல்லியில் நடைபெற்ற அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் தேர்தலில் தென் மண்டலச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட TWAD மாநிலத் தலைவர் பொறியாளர் வி.வி.சிதம்பரம் அவர்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. இவர் பணி சிறக்க வாழ்த்துகிறது.

அரசாணை எண்.1, பொ.ப.து., நாள் 02.01.1990ன் படி 26.02.2006 அன்று 23 தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. இவர்களை பணி இறக்கம் (Depromotion) செய்ய வேண்டும் என்று மாற்றுச் சங்கம் வழக்கு தொடுத்தது. ஏற்கனவே பகுதி நேரப் பட்டம் பயின்றவர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற 76 பேருக்கு 24.02.2006 தேதியிட்டு அரசாணை எண்.1, பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி உதவிப் பொறியாளர் பதவி 2007 ஆம் ஆண்டு அளிக்கப்பட்டது. இதற்கு சிலரால் நீதிமன்ற தடையாணை பெறப்பட்டது. நீதி மன்ற தடையாணை நீக்கப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்தது. மேற்கண்ட வழக்குகள் 16.04.2013 அன்று நீதியரசர் மாண்புமிகு பி.ஆர்.சிவக்குமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக திரு.ரவி சண்முகம், திரு.ராஜசேகர் ஆகிய இரண்டு வழக்கறிஞர்கள் வாதாடினார்கள். விசாரணை முடிந்து தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

1997 ஆம் ஆண்டு முதல் ஊட்டு பதவியிலிருந்து இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் பணிவரன்முறை (Regularisation) செய்யப்படுவதற்கு தடையாக இருந்த மாற்று சங்கத்தால் தொடுக்கப்பட்ட இரண்டு வழக்குகளில் ஒரு வழக்கு (W.P.No.23830/2004,WPMPs 28882, 28987, 30205/2004) கடந்த 22.04.2013 அன்று நீதியரசர் மாண்புமிகு ஆறுமுகசாமி அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. தமிழ்நாடு

பொறியியல் சங்கத்தின் சார்பாக வழக்கறிஞர் திருமதி.மலர்விழி உதயகுமார் அவர்கள் வாதிட்டார்கள். இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டது. வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட இளநிலைப் பொறியாளர்களை நிரந்தரப்படுத்தி பணிவரன்முறை செய்ய வேண்டும் என ஆணையிட்டார். நீண்ட போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. தமிழ்நாடு பொறியியல் சங்கத்தை பெரும் கவலைக்கும், மன உளைச்சலுக்கும் உள்ளாக்கிக் கொண்டிருந்த பெரும் பிரச்சினை. சங்கத்தின் பெரும் முயற்சியால் இந்த வழக்கு கொண்டு வரப்பட்டு நல்லதொரு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இன்னொரு வழக்கை விரைவில் முடிக்க தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். இந்த இரண்டு வழக்குகளை முடிவுக்கு கொண்டு வருவது தான் இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு.

இதற்கு முன்பாக 19, 20.03.2013 ஆகிய தேதிகளில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், முதன்மை தலைமைப் பொறியாளர் ஆகியோருடன் நடந்த பேச்சு வார்த்தையின் விளைவாக, சுமார் 300 இளநிலைப் பொறியாளர்களை பணிவரன்முறை செய்ய, கருத்துரு கேட்டு அனைத்து அலுவலகங்களுக்கும் முதன்மை தலைமைப் பொறியாளர் கடிதம் அனுப்பியுள்ளார். 10 நாட்களுக்குள் (பணிவரன்முறை செய்ய) கருத்துரு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. ஆனால் கருத்துரு முழுமையாக வந்து சேரவில்லை.

பட்டயக் கல்வித் தகுதியுடன் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து பணி ஆய்வாளர்களாக பணிவரன்முறை செய்யப்பட்டவர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்க கருத்துரு அனுப்புமாறு எல்லா அலுவலகங்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் கருத்துரு முழுமையாக வந்து சேரவில்லை.

எனவே மேற்கண்ட இரண்டு பொருள் குறித்த கருத்துருக்கள் உடனடியாக முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு வந்து சேரும் வண்ணம் மையச் சங்க, கிளைச் சங்க பொறுப்பாளர்கள் உரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் (TNPSC) இளநிலைப் பொறியாளர் பணி நியமனத்தில் மீதமுள்ள 46 பதவிகளுக்கான கருத்துருவையும் உரிய நேரத்தில் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்ப தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

ஜீலை மாதத்தில் பொதுப்பணித்துறைக்கு 138 இளநிலைப் பொறியாளர் பதவிகளுக்கு பணி நியமனம் செய்வதற்கு அறிவிப்பு வெளியாகும் என்று உறுதி அளிக்கிறோம்.

## மூத்தப் பொறியாளர்கள்

மூத்தப் பொறியாளர்கள் இரு தரப்பினரிடையே கருத்து வேறுபாட்டின் f huz khf mt Hf S f Fs ;, Uej gpur r pd d j wNghJ TNEA, DECT ஆகியவற்றிற்கு கெடுதல் செய்கிற அளவுக்கு வந்துவிட்டது. இவர்களுக்குள் உள்ள பிரச்சினை இந்தியா, பாகிஸ்தானுக்கு இடையே உள்ள அளவுக்கு பெரிய பிரச்சினை என்று நினைத்து செயல்படுகிறார்கள். ஆனால் இது வெறும் ஈகோ பிரச்சினை. எப்போதும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் மூத்தப் பொறியாளர்கள் விஷயத்தில் நடுநிலை காத்து வருகிறது. ஆனால் இவர்கள் என்ன செய்தாலும் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.

நீண்ட பொறுமை காத்து வந்த தமிழ்நாடு பொறியியல் சங்கம் இனிமேலும் பொறுக்க முடியாது என்று ஒரு கட்டம் வந்தவுடன் தான் இதுபோன்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறோம்.

மீண்டும் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளித்து "TNEA-விற்கும் DECT-க்கும் FORDET ஆல் எந்த பிரச்சினையும் ஏற்படாது" என்று ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தால் தீர்மானத்தை மறு பரிசீலனை செய்கிறோம் என்று கூறியிருந்தோம். இது மாதிரி கடிதம் எழுதிக் கொடுக்கக் கூட இவர்களின் ஈகோ இடம் கொடுக்கவில்லை.

தன் சுயநலத்தை விட இயக்கத்தின் நலன்தான் முக்கியம் என்று நினைப்பவர்கள் தான் உண்மையான தலைவர்கள். இயக்கத்தின் நலனை விட தங்கள் ஈகோதான் முக்கியம் என்று நினைப்பவர்களை என்ன சொல்வது. ஒரு நரி தன் வால் வெட்டுப்பட்டதற்காக, கூட இருந்த நரிகளின் வாலையெல்லாம் நறுக்கிய கதைதான் இப்போது நடந்துக் கொண்டிருக்கிறது.

பொதுப்பணித்துறையிலிருந்து ஓய்வுப் பெற்ற பட்டப் பொறியாளர்கள் (Degree Engineeers) தமிழ்நாடு பொதுப்பணித்துறை மூத்தப் பொறியாளர் சங்கம் என்று ஒரு சங்கம் அமைத்து முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை, தேசிய நதிநீர் பிரச்சினை போன்ற பல்வேறு சமுதாய பிரச்சினைகளில் தலையிட்டு **தேச நலனுக்கு நலன் பயக்கக் கூடிய** பல்வேறு காரியங்களை சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் FORDET சமுதாயத்தின் நலனுக்காக ஒரு சிறிய நல்ல காரியத்தைக் கூட செய்ததில்லை. நான் பெரியவனா? நீ பெரியவனா? என்று சண்டை போட்டுக் கொள்வதிலேயே முழு நேரத்தையும் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"எவனும் பெரியவன் இல்லை. எதுவும் நிரந்தரம் இல்லை" என்ற மெய்ஞானம் வந்திருக்க வேண்டிய வயதில் ஈகோவினால் அடுத்தவர்களுக்கு கெடுதல் செய்ய

ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் சமுதாயத்திற்கு எந்த நல்ல காரியமும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை. யாருக்கும் தீங்கு விளைவிக்காமல் இருக்கலாம். TNEA, DECT-க்கு தீங்கு ஏற்பட்டாலும் தங்கள் ஈகோ வாழ வேண்டும் என்று நினைக்கிறார்கள். இவர்கள் திருந்த வேண்டும்.

TNEA, DECT ஆகியவற்றிற்கு யாராலாவது ஒரு சிறு தீங்கு ஏற்பட்டாலும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்காது.

இறுதியாக,

"இவர்களுக்கு நிறைய நேரம் இருக்கிறது
எங்களுக்கு நிறைய வேலை இருக்கிறது".

நிறைய நேரம் இருப்பவர்கள் செய்வதையெல்லாம் நிறைய வேலை இருப்பவர்கள் செய்ய முடியாது.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்**

**(த.முருகேசன்)**
பொதுச்செயலாளர்

**த. முருகேசன்,** பொதுச் செயலாளர்
செல்பேசி எண் 9444 999 588, 9281 309 688
E.mail: d.murugavelsivan@gmail.com

**மையச் சங்க, கிளைச் சங்க பொறுப்பாளர்களின் கவனத்திற்கு**

சுமார் 300 இளநிலைப் பொறியாளர்களின் பணிவரன்முறை (Regularisation) சம்பந்தமாக கருத்துரு அனுப்பக் கோரி அனைத்து அலுவலகங்களுக்கும் முதன்மை தலைமைப் பொறியாளர் கடிதம் அனுப்பியுள்ளார். மேலும் பட்டயக் கல்வி தகுதியுடன் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து பணி ஆய்வாளர்களாக பணிவரன்முறை செய்யப்பட்டவர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்க கருத்துரு அனுப்புமாறு எல்லா அலுவலகங்களுக்கும் முதன்மை தலைமைப் பொறியாளரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட விபரங்களை உடனடியாக முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க உடனடி நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறோம். மிக மிக அவசரம்.

**- பொதுச் செயலாளர்.**

பெறுதல்

முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்),
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பொதுப்பணித்துறை - த.நா.பொ.சார்நிலை பணித் தொகுதி - தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்கள் உருவாக்க கோருதல் சம்பந்தமாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.680, பொ.ப.து., நாள் 23.03.1990.
2. அரசாணை (நிலை) எண்.408, பொ.ப.(டி2)துறை, நாள் 31.05.1995.
3. அரசாணை (நிலை) எண்.66, பொ.ப.து., நாள் 20.02.1998.
4. அரசாணை (நிலை) எண்.227, பொ.ப.து., நாள் 12.04.1999.
5. அரசாணை (நிலை) எண்.591, பொ.ப.து., நாள் 28.12.2004.
6. அரசாணை (நிலை) எண்.11, பொ.ப.(சி1)துறை, நாள் 13.01.2006.
7. அரசாணை (நிலை) எண்.12, பொ.ப.(சி1)துறை, நாள் 13.01.2006.
8. அரசாணை (நிலை) எண்.198, பொ.ப.(சி1)துறை, நாள் 19.10.2006.

பொதுப்பணித்துறையில் அரசின் அனைத்து திட்டப் பணிகள் மற்றும் பழைய கட்டுமானங்களை பராமரிக்கும் பணிகள் அனைத்தையும் முன் எடுத்துச் சென்று, ஆய்வு பணிகள் செய்வது முதல் மதிப்பீடு தயாரித்தல், பணிகள் ஒப்பந்தம் செய்த பின் ஒப்பந்தக்காரர்கள் முறையாக தரத்துடன் பணிகளை செய்து முடிக்க உரிய கண்காணிப்புப் பணிகள் மேற்கொண்டு, பண பட்டியல் (Bill) தயாரித்து கொடுப்பது, திட்டப் பணிகள் முடிவுற்று பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வரை முழுவதுமாக பணிபுரியும் அலுவலர் பொதுப்பணித்துறையின் பிரிவு அலுவலர் (இளநிலைப் பொறியாளர் / உதவிப் பொறியாளர்) ஆவார்.

இப்பிரிவு அலுவலகப் பணிகளை செவ்வனே செய்ய பிரிவு அலுவலர்களுக்கு களப்பணியிலும், அலுவலகப் பணியிலும் உதவிப் புரிய முன்பு தொழில் நுட்ப உதவியாளர்கள் பணிபுரிந்து வந்தார்கள். பிரிவு அலுவலகப் பணிகளும் சிறப்பாக செய்யப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது பிரிவு அலுவலர்களுக்கு பணியில் உதவிச் செய்ய கிட்டதட்ட யாரும் இல்லை என்ற நிலை தற்போது பெரும்பாலான பிரிவு அலுவலகங்களில் ஏற்பட்டுள்ளது. பெரும்பான்மையான பணியாளர்கள் பணி ஓய்வு பெற்றுவிட்டனர். காலி பணியிடங்களில் புதிய பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. ஏனெனில் பெரும்பாலும் பணியிடங்கள் உடலக பதவிகளாக (Body Constituted Post) இருந்ததால் புதிய பணியாளர்கள் நியமிக்க முடியாத நிலை உள்ளது. இந்நிலையில் பிரிவு அலுவலர்களுக்கு களப்பணி மற்றும் அலுவலகப் பணிகளில் உதவிச் செய்ய மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ள உதவியாளர்கள் யாரும் இல்லை. இதனால் பிரிவு அலுவலர்கள் தங்கள் சக்திக்கு அதிகமான கூடுதல் பணிச்சுமை மற்றும் மன அழுத்தத்திற்கு ஆளாகும் நிலைமை உள்ளது.

இதனால் அரசின் திட்டப் பணிகளை செய்து முடிக்க காலதாமதம் ஏற்படுதல், பணிகளை தொழில் நுட்பத்துடன், தரத்துடன் செய்ய சிரமம் ஏற்படுதல், அரசு சொத்துக்களை (மரங்கள், கருவி தளவாடங்கள்) கண்காணித்து பாதுகாக்க சிரமங்கள் ஏற்படுதல் போன்ற நிலைமை உள்ளது.

ஒரு பிரிவு அலுவலருக்கு ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் களப்பணிகள் நடைபெறுவதால், பிரிவு அலுவலர் எல்லா வேலை தளத்திலும் ஒரே நேரத்தில் இருக்க முடியாது. எனவே பணிகளை முடிப்பதில் காலதாமதம் ஏற்படுதல் மற்றும் தொழில் நுட்பத்துடன் கூடிய தரமான வேலைகளை செய்ய முடியாமை ஆகியவை ஏற்படும்.

எனவே இக்காலக் கட்டத்தில் கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப கணிணி பயன்பாடு முதலியன தெரிந்த பொறியியல் பட்டயப் படிப்பு படித்த (Diploma in Civil Engineering) தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்கள் குறைந்த பட்சம் 500 பணியிடங்கள் உருவாக்கிடவும், பொதுப்பணித்துறை பிரிவு அலுவலகங்கள் சிறப்புடன் செயல்பட பிரிவுக்கு ஒரு தொழில் நுட்ப உதவியாளர் நியமிக்க ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இதற்கு முன் பார்வை 1ல் கண்ட அரசாணையின் படி பொதுப்பணித்துறையில் 300 தொழில் நுட்ப உதவியாளர்கள் பணியிடங்கள் உருவாக்க அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால் அவ்வரசாணை செயல்படுத்தப்படாமல் உள்ளது. மேலும் பார்வை 2 முதல் 8 வரை உள்ள அரசாணைகளின் வாயிலாக சுமார் 500 தொழில் நுட்ப உதவியாளர்கள் Supernumerary மற்றும் உடலகப் பதவிகள் உருவாக்கப்பட்டது. அவை ஏற்கனவே துறையில் பல்வேறு திட்டக் கோட்டங்களில் பணிபுரிந்து வந்த தொழில் நுட்ப உதவியாளர்களை பணிவரன்முறைப்படுத்த ஆணை வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

தற்போது அத்தொழில் நுட்ப உதவியாளர்கள் அனைவரும் இளநிலைப் பொறியாளர் / உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்று சென்றுவிட்டனர். மேலும் மேற்கண்ட பணியிடங்கள் உடலகப் பதவிகள் என்பதால் தொழில் நுட்ப உதவியாளர்கள் பதவி உயர்வு பெற்றவுடன் அப்பதவிகள் காலாவதியாகிவிட்டது.

தற்போது தொழில் நுட்ப உதவியாளர் புதிய பணியிடங்கள் உருவாக்குவதினால்,

1. பிரிவு அலுவலகங்களின் சிறப்பான செயல்பாட்டிற்கும், அரசின் திட்டங்கள் விரைவில் செயல்படுத்தி மக்களுக்கு விரைவான சேவை அளிக்கவும் உதவியாக இருக்கும்.
2. பட்டயம் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும்.
3. ஏற்கனவே பெரும்பான்மையான திட்டப் பணிகள் மற்றும் இதர மராமத்து பணிகளில் P.S. Charges என்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலிருந்து தினக்கூலி அடிப்படையில் தொழில் நுட்ப பணியிடங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதால் அரசுக்கு தனியாக பெரும் நிதிச்சுமை ஏற்படாது.

எனவே இவற்றை எல்லாம் அரசு கவனத்தில் கொண்டு பொதுப்பணித்துறையில் சிறப்பான செயல்பாட்டை மேலும் செம்மைபடுத்த துறையில் ஆணிவேரான பிரிவு அலுவலகங்களில் தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்கள் உருவாக்க ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(து. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

# கலங்கரை விளக்கம்

**FINANCE (ALLOWANCES) DEPARTMENT**

**G.O.No.103, DATED 1st April, 2013**

(Panguni 19, Nandhana, Thiruvalluvar Aandu 2044)

**GENERAL PROVIDENT FUND** – Withdrawal from the General Provident Fund – Maximum limit – Amendments to rule 15-B of General Provident Fund (Tamil Nadu) Rules – Issued – Notified.

---

**Read** the following:-

1. G.O.Ms.No.33, Finance (Allowances) Department, dated 21.01.1992.
2. G.O.Ms.No.381, Finance (Allowances) Department, dated 30.09.2010.
3. From the Accountant General Letter No.Pr.AG (A&E)/FMI / I /2012-13/145468/ 141, dated 26.10.2012.

* * * * * *

**ORDER:**

The following Notification will be published in the Tamil Nadu Government Gazette.

**NOTIFICATION**

In exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India and of all other powers hereunto enabling the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the General Provident Fund (Tamil Nadu) Rules.

**AMENDMENTS**

In the said Rules, in rule 15-B, in sub-rule (1), for the provisos, the following provisos shall be substituted, namely:-

"Provided that in no case the maximum amount of withdrawal for the purposes specified in clauses (a), (b), (c) and (h) of rule 15-A shall exceed Rs.5,00,000/- (Rupees five lakh only) or 75 times of the monthly pay, whichever is less:

Provided further, that in no case the maximum amount of withdrawal for the purposes specified in clauses (d), (e), (f) and (g) of rule 15-A shall exceed Rs.9,00,000/ (Rupees nine lakh only) or 75 times of the monthly pay whichever is less.

Provided also that in the case of a subscriber who has availed himself of an advance under the Scheme for the grant of advances for house building purpose, sponsored by the State or the Central Government or the Public or Private Financial Institutions, the sum withdrawn under this sub-rule together with the amount of advance taken under the afore-said Scheme or the assistance taken from the above said sources shall not exceed Rs. 25,00,000/- (Rupees twenty five lakh only)."

(BY ORDER OF THE GOVERNOR)

K. SHANMUGAM
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

**ABSTRACT**

Establishment - Public Works Department - Tamil Nadu Engineering Service - Promotion of Executive Engineers as Superintending Engineers and transfer and posting of Superintending Engineers in Public Works Department - Orders - Issued.

---

**Public Works (A2) Department**

**G.O.(D)No.145** **Dated: 25.04.2013**

சித்திரை 12,
திருவள்ளுவர் ஆண்டு, 2044

Read:

1. G.O.(D)No.77, Public Works (A1) Department, dated 06.03.2013.
2. From the Engineer-in-Chief (Buildings) and Chief Engineer (Buildings), Chennai Region and Chief Engineer (General), Public Works Department Recommendation Roll No.6/2013 (S.E), dated 02.04.2013.

**ORDER:**

The following promotion and posting of Executive Engineers as Superintending Engineers on regular basis in Public Works Department are ordered:-

(1) Thiru N.Asokan, Executive Engineer, Public Works Department, Cauvery Technical Cell, Chennai, who has been included in the list of Executive Engineer fit for promotion as Superintending Engineer for the panel year 2011-2012 and whose seniority has been restored as Sl.No.6(a) vide G.O.(D)No.556 Public Works (A1) Department, dated 27.12.2012, is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Tank Modernisation Circle, Vellore in the existing vacancy on regular basis with effect from the date of his joining duty in the order of seniority.

(2) Thiru P.Mariappan, Executive Engineer, Public Works Department, Planning and Designs Division, Madurai is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Circle, Medical Works, Madurai in the existing vacancy.

(3) Thiru L.Muniappan, Executive Engineer, Public Works Department / Deputy Superintending Engineer, Public Works Department, Lower Cauvery Basin Circle, Thanjavur is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Plan Formulation Circle, Trichy in the existing vacancy.

(4) Thiru R.Baskaran, Executive Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Division, Thanjavur is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Circle, Salem in the existing vacancy.

(5) Thiru D.Manoharan, Executive Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Division, Ariyalur is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Circle, Vellore in the existing vacancy.

(6) Thiru C.Rajes, Executive Engineer, Public Works Department, Periyar Dam Special Division, Cumbum is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Periyar Vaigai Basin Circle, Madurai in the existing vacancy.

(7) Thiru P.L.Valliappan, Executive Engineer, Public Works Department / Deputy Chief Engineer, Madurai Region, Water Resources Department, Madurai is promoted and posted as Superintending Engineer, Public Works Department Vaippar Basin Circle, Virudhunagar in the exising vacancy.

(8) Thiru D.Kaleel Ahamed, Executive Engineer, Public Works Department, Special Project Division, Cuddalore is promoted as Superintending Engineer, Public Works Department and posted as Joint Chief Engineer (Buildings) Public Works Department, Office of the Engineer in Chief (Buildings) and Chief Engineer (Buildings), Chennai Region and Chief Engineer (General) Public Works Department, Chennai in the existing vacancy.

(9) Thiru P.B.Mohan, Executive Engineer, Public Works Department, Planning and Designs Division, Vellore is promoted as Superintending Engineer, Public Works Department and posted as Joint Chief Engineer (Operation and Maintenance), Office of the Chief Engineer (Operation & Maintenance) Chennai in the existing vacancy.

(10) Thiru A.Malaichamy, Executive Engineer, Public Works Department / Deputy Superintending Engineer, Public Works Department, Lower Vaigai Basin Circle, Sivagangai is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Ground Water Circle, Madurai in the existing vacancy.

(11) Thiru K.Udayar, Executive Engineer, Public Works Department, Ex-zamin Standardisation Division, Karaikudi is promoted as Superintending Engineer, Public Works Department and posted as Superintending Engineer, Public Works Department / Director, Directorate of Dam Safety, Chennai in the existing vacancy.

(12) Thiru S.Kumaresan, Executive Engineer, Public Works Department, Special Project Division, Mayanur is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Upper Cauvery Basin Circle, Salem in the existing vacancy.

(13) Thiru V.Balasubramani, Executive Engineer, Public Works Department (On Leave) is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Hindu Religious and Charitable Endowment Department Chennai in the existing vacancy.

(14) Thiru A.Venkatachalam, Executive Engineer, Public Works Department, Bhavanisagar Dam Division, Bhavanisagar is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Bhavani Basin Circle, Erode in the existing vacancy.

(15) Thiru P.Ramalingam, Executive Engineer, Public Works Department, Planning and Designs Division, Erode is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Planning and Designs Circle, Chennai in the existing vacancy.

(16) Thiru T.Kanthimathinathan, Executive Engineer, Public Works Department, Lower Palar Basin Division, Kancheepuram is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Procurement Cell, Office of the Engineer in Chief, Water Resources Department, Chennai in the existing vacancy.

(17) Thiru V.D.Suresh, Executive Engineer, Public Works Department, Sate Water Resource Management Agency, Chennai is promoted and posted as Superintending Engineer, Public Works Department, State Project Management Unit under Dam

Rehabilitation (SPMU) and Improvement Project (DRIP) Under the control of Chief Engineer, (Operation&Maintenance) vice Thiru R.Sekar, Superintending Engineer, transfeered.

(18) Thiru A.James Lourdusamy, Executive Engineer, Public Works Department, Mambiyar Reservoir Project Division, Valliyoor is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Tamil Nadu Fisheries University at Nagapattinam (On Deputation).

(19) Thiru S.Thinakaran, Executive Engineer, Public Works Department, Buildings (Construction and Maintenance) Division, virudhunagar is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Buildings (Construction & Maintenance) Circle, Tirunelveli vice Thiru C.Cyril Christopher, Superintending Engineer, transfeered.

(20) Thiru T.Arul Santhiappan Jeevendra Durai, Executive Engineer, Public Works Department, Sholayar Basin Division, Valparai is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Ground Water Circle, Chennai in the existing vacancy.

(21) Thiru A.Balasubramanian, Executive Engineer, Public Works Department / Deputy Superintending Engineer, Public Works Department, Buildings (Construction and Maintenance) Circle, Salem is promoted as Superintending Engineer, Public Works Department and posted as Superintending Engineer (Buildings) in Corporation of Chennai, Chennai (On Deputation).

(22) Tmt A.Kannambal, Executive Engineer, Public Works Department, Buildings (Construction and Maintenance) Division, Medical Works, Tiruppur is promoted and posted as Superintending Engineer, Public Works Department, Buildings (Construction and Maintenance) Circle, Coimbatore in the existing vacancy.

2. The following transfer and posting of Superintending Engineers in Public Works Department are ordered.

(1) Thiru R.Sekar Superintending Engineer, Public Works Department, State Project Management Unit under Dam Rehabilitation (SPMU) and Improvement Project (DRIP) Under the control of Chief Engineer, (Operation & Maintenance) is transferred and posted as Superintending Engineer / Director, Public works Staff Training Institute. Trichy in the existing vacancy.

(2) Thiru C.Cyril Christopher, Superintending Engineer, Public Works Department, Buildings (Construction and Maintenance) Circle, Tirunelveli is transfeered and posted as Superintending Engineer, Public Works Department, Thambarabarani Basin Circle, Tirunelveli vice Thiru N.Jegannathan, Superintending Engineer, transferred.

(3) Thiru N.Jegannathan, Superintending Engineer, Public Works Department, Thambarabarani Basin Circle, Tirunelveli is transferred and posted as Superintending Engineer, Public Works Department, Environmental Circle, Trichy in the existing vacancy.

(By Order of the Governor)

M.Sai Kumar,
Secretary to Government.

**தமிழ்நாடு அரசு**

**பொதுப்பணித்துறை**

அனுப்புநர்
பொறி.இரா.கோபாலகிருஷ்ணன், பி.இ., எப்.ஐ.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
தலைமைப் பொறியாளர் (க), சென்னை மண்டலம்,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

பெறுநர்
திரு.த.முருகேசன்,
பொதுச் செயலாளர்,
த.நா.பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

**கடித எண்.எஸ்2(2)/26232/2008/நாள் 08.04.2013**

அய்யா,

பொருள்: பணியமைப்பு - த.நா.பொ.சா.ப.தொகுதி - ஊட்டுப் பதவியிலிருந்து பணிமாற்றல் அடிப்படையில் உதவிப் பொறியாளர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களின் பணிகளை வரன்முறைப்படுத்தக் கோரியுள்ளது - தொடர்பாக.

பார்வை: தங்களது கடித எண்.1 பொ.செ/02-2013 நாள் 21.02.2013.

------

பார்வையில் காணும் தங்களது கடிதத்தில் பணி மாறுதல் அடிப்படையில் நியமிக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களின் பணிகளை வரன்முறைப்படுத்தக் கோரப்பட்டதன் தொடர்பாக பின்வரும் பதிலுரை அளிக்கப்படுகிறது.

அரசாணை எண்.1/பொ.ப.து./நாள் 02.01.1990-ன் அடிப்படையில் த.நா.பொறியியல் பணி சிறப்பு விதிகளுக்கு திருத்தம் வெளியிடப்படாத நிலையிலும், இப்பொருள் தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையிலும், மேற்குறித்த அரசாணையின்படி பணி நியமனம் செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களின் பதவி உயர்வு வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் பணி நியமனம் செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களின் பணிகள் அரசின் அனுமதியுடன் நிபந்தனைக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து தற்சமயம் 2003 ஆம் ஆண்டு முடிய நியமிக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களின் பணிகளை வரன்முறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தொடர்புடைய உதவிப் பொறியாளர்களின் பணி மற்றும் பண நலன்கள் பாதிக்கப்படாத வண்ணம் விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இரா.கோபாலகிருஷ்ணன்,
முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
தலைமைப் பொறியாளர் (க), சென்னை மண்டலம்,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது)

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

கண்காணிப்பாளர்.

**GOVERNMENT OF TAMIL NADU**
**PUBLIC WORKS DEPARTMENT**

From
Er.R.Gopalakrishnan, B.E., F.I.E.,
Engineer-in-Chief (Buildings),
Chief Engineer (B), Chennai Region &
Chief Engineer (General), PWD,
Chepauk, Chennai - 600 005.

To
1. All Chief Engineers of W.R.O. & Buildings Organisation,
2. All Superintending Engineers of Buildings Region, Chennai.

**Letter No.S2(4)/20483/2010/dated 26.03.2013.**

Sir,

Sub: Establishment - T.N.E.S.S. - service details of Junior Engineers (Civil) whose services are not yet regularised - requested - regarding.

-----

I request you to send the service details of Junior Engineers (Civil) working under your control whose services are not yet regularised in the post of Junior Engineers (Civil) in the format enclosed herewith, within a period of ten days from the date of receipt of this communication.

Besides sending the hard copy of the report, a soft copy in "MS-EXCEL" format may be sent through e-mail to the following e-mail address.

aogeneralpwd@gmail.com

It is informed that only a single consolidated report will be accepted and no piece-meal report will be entertained.

This may be accorded "Top-priority".

Encl: Format.

Er.R.Gopalakrishnan,
for Engineer-in-Chief (Buildings),
Chief Engineer (B), Chennai Region &
Chief Engineer (General), PWD

/ forwarded / by order /

Sd/-
Superintendent.

---

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளையின் உறுப்பினர் பொறியாளர் L.பிளமின்ராஜ் உதவிச் செயற்பொறியாளர் அவர்கள் மகள் திருமணத்திற்காக ரூ.2,000 (ரூபாய் இரண்டாயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருவாரூர்-நாகை கிளையின் உறுப்பினர் பொறியாளர் M.பக்கிரிசாமி உதவிச் செயற்பொறியாளர் அவர்கள் மகன் திருமணத்திற்காக ரூ.500 (ரூபாய் ஐநூறு) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## DETAILS OF JUNIOR ENGINEERS (CIVIL) WHOSE SERVICES ARE NOT YET REGULARISED

**NAME OF THE REGION/ORGANISATION:**

| SL.NO. | NAME OF THE JUNIOR ENGINEER | DATE OF BIRTH | DATE OF JOINING IN THE POST OF J.E.(CIVIL) WHETHER IN FN OR AN SHOULD BE SPECIFIED | NAME OF SECTION IN WHICH WORKING | NO.& DATE OF PROC.OF C.E.(GL) IN WHICH APPOINTED AS J.E. | FEEDER POST FROM WHICH APPOINTED AS J.E.(T.A., OVERSEER, D.O.) | DATE OF COMPLETION OF PROBATION IN THE FEEDER POST | DATE OF PASSING OF ACCOUNT TEST PART I | DATE OF PASSING OF ACCOUNT TEST PART II | IF ACQUIRED DEGREE IN ENGINEERING DATE OF ACQUISITION OF DEGREE | WHETHER ANY DISCIPLINARY PROCEEDINGS/ VIGILANCE ENQUIRY IS PENDING OR CONTEMPLATED AGAINST THE INDIVIDUAL | REMARKS |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1 | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | |

R. Gopalakrishnan,
Engineer-in-Chief (Buildings),
Chief Engineer (B), C.R.,&
Chief Engineer (GI), P.W.D.

/true copy/

Superintendent

28-03-13

**தமிழ்நாடு அரசு**
**பொதுப்பணித்துறை**

அனுப்புநர்
பொறி.இரா.கோபாலகிருஷ்ணன், பி.இ., எப்.ஐ.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
தலைமைப் பொறியாளர் (க), சென்னை மண்டலம்,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

பெறுநர்
தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து.,
திருச்சி மண்டலம்,
திருச்சி.

**கடித எண்.எஸ்4(2)/24905/2009-6/நாள் 15.02.2013**

அய்யா,

பொருள்: பணியமைப்பு - பொ.ப.து. - 01.07.1994 முதல் 01.07.2004 அன்றுள்ளபடி 10 ஆண்டுகள் பணிமுடித்துள்ள 333 தினக்கூலி தொழில் நுட்ப உதவியாளர்களின் பணிகளை வரன்முறைப்படுத்தி ஆணை வெளியிடப்பட்டது - திருத்திய பணிவரன்முறை செய்தல் ஆணை வெளியிடப்பட்டது - செயல்படுத்துதல் - தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்.124 பொ.ப(சி1)துறை நாள் 15.05.2008.
2. இவ்வலுவலக கடித எண்.எஸ்4(1)/24905/2009-4 ஷ 2009-6, 17.07.2009, 29.01.2010, 09.06.2011 மற்றும் 23.07.2012.
3. கண்காணிப்புப் பொறியாளர், நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி அவர்களின் கடித எண்.நி2/4939/2008/நாள் 25.06.2012.

------

பார்வையில் காணும் அரசாணையில் 333 தினக்கூலி தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு முன்தேதியிட்டு திருத்திய பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. பார்வை 2ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக அரசிடம் தெளிவுரை கோரப்பட்டது, இந்நிலையில்

1. பார்வையில் காணும் அரசாணையின் படி 333 தினக்கூலி தொழில் நுட்ப உதவியாளர்களின் 10 ஆண்டுகள் அவர்கள் பணி நிறைவு செய்த நாளிலிருந்து பணியினை வரன்முறை செய்தும்.

2. மேற்கூறிய தினக்கூலி தொழில் நுட்ப உதவியாளர்களின் 10 ஆண்டுகள் பணி முடித்த பின்னரே வரன்முறைப்படுத்தப்பட்டதால் 10 ஆண்டுகள் பணிமுடித்த நாளிலிருந்தும் பணிவரன்முறை செய்தும், ஆணை வெளியிடப்பட்ட இடைப்பட்ட காலத்திற்கு பணப்பயன் / பண நிலுவைப் பலன்கள் இன்றி விதியின்படி வழக்கமான பதவி உயர்வு, வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் ஓய்வூதியத்திற்கும் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் எனவும், மேலும் இவர்களது ஊதியத்தை கருத்தியலான (Notional) முறையில் நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், முன்தேதியிட்டு இவர்களது பணியினை பணிவரன்முறை செய்யப்படுவதால் இவ்வாணை வெளியிடுவதற்கு முன்னதாக பதவி உயர்வு பெற்று பணியில் தனக்கு இளையவர்களாக உள்ளவர்களைக் காட்டி பதவி உயர்வு கோருவது ஏற்கப்படமாட்டாது எனவும் அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இதுகாணும் இப்பொருள் தொடர்பாக அரசிடம் இருந்து தெளிவுரை வரப்பெறாத காரணத்தினால், மேற்கண்ட அரசாணையின்படி தங்கள் மண்டலத்தைச் சார்ந்த 8 நபர்களுக்கு மட்டுமே இன்னும் அரசு ஆணை செயல்படுத்தப்படாமல் இருக்கும் நிலையில் மேலும் இவ்வலுவலகம் மற்றும் அரசிடமிருந்து எவ்வித தெளிவுரையும் எதிர் நோக்காமல் தங்கள் மட்டத்திலேயே ஆணையை செயல்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொறி.இரா.கோபாலகிருஷ்ணன்,
முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
தலைமைப் பொறியாளர் (க), சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது)

/ உண்மை நகல் /

கண்காணிப்பாளர்.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்திருத்தத் (எஸ்) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

**அரசு கடித (நிலை) எண்.23, நாள் 07.03.2013**

அனுப்புநர்

திருமதி.ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.,
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்

அனைத்து அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள்/
அரசு முதன்மைச் செயலாளர்கள் / அரசு செயலாளர்கள், சென்னை-600 009.

அனைத்து துறைத் தலைவர்கள் / மாவட்ட ஆட்சியர்கள்,
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 003.

கருவூலம் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை - 600 015.

அய்யா/அம்மையீர்,

பொருள்: பணியாளர் - அரசுப் பணியாளர்கள் இடமாற்றம் பொது மாற்றல்கள் 2013-2014 ஆம் ஆண்டுக்கு தொடருதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்.10, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 07.01.1994.

2. அரசுக் கடித எண்.23847/எஸ்/1998-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 05.08.1998.

3. அரசுக் கடித எண்.25192/எஸ்/1999-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 21.05.1999.

4. அரசுக் கடித எண்.24954/எஸ்/2011-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 29.09.2011.

5. அரசுக் கடித (நிலை) எண்.63, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 30.04.2012.

பார்வை 1 மற்றும் 2ல் காணும் அரசாணை மற்றும் கடிதத்தின்படி ஒவ்வொரு ஆண்டின் ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் முதல் மே மாதம் 31 ஆம் நாள் முடிய உள்ள மாற்றல் காலத்தில் அரசுப் பணியாளர்களின் பொது மாற்றல்கள் நடைபெற வேண்டும். பார்வை மூன்றில் காணும் கடிதத்தில், நிருவாகத் தேவையில்லாத பட்சத்தில் மூன்று ஆண்டுகள் பணி முடித்தவர்கள் என்ற காரணத்தினால் மட்டும் செய்யப்படும் பொது மாற்றல்களுக்கு, அரசின் நிருவாகச் செலவினைக் குறைக்கும் பொருட்டு 1999 ஆம் ஆண்டிற்கு தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டு, பின்னர் இத்தடையாணை 2011 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது.

2. பார்வை 5ல் கண்டுள்ள கடிதத்தில், அரசு பணியாளர்களின் இடமாற்றம் மற்றும் பொது மாற்றல்களுக்கு விதிக்கப்பட்ட தற்காலிகத் தடையாணையை 2012-2013 ஆம் ஆண்டிற்கு விலக்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. தற்போது அரசு பணியாளர்களின் இடமாற்றம் மற்றும் பொது மாற்றல்கள் 2013-2014 ஆம் ஆண்டிற்கு தொடர்வது குறித்து அரசு கவனமுடன் ஆய்வு செய்த பின்னர் 2013-2014 ஆம் ஆண்டிற்கு இடமாற்றம் மற்றும் பொது மாற்றல்களைத் தொடரலாம் என முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேற்குறிப்பிட்ட ஆணையினைத் தவறாமல் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,
அரசு தலைமைச் செயலாளருக்காக.

---

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கோவை-பொள்ளாச்சி கிளையின் உறுப்பினர் பொறியாளர் N.சுப்ரமணியன் இளநிலைப் பொறியாளர் அவர்கள் 11.04.2013 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளையின் உறுப்பினர் பொறியாளர் M.திருநாவுக்கரசு இளநிலைப் பொறியாளர் அவர்களின் தாயார் திருமதி M.சரஸ்வதி அவர்கள் 05.04.2013 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளையின் செயலாளர் பொறியாளர் T.செல்லன் உதவிப் பொறியாளர் அவர்களின் தந்தை திரு.T.திருமலை அவர்கள் 06.04.2013 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளையின் உறுப்பினர் பொறியாளர் A.காந்தி உதவிச் செயற்பொறியாளர் அவர்களின் மனைவி திருமதி G.லட்சுமி அவர்கள் 12.04.2013 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மதுரை கிளையின் தலைவர் பொறியாளர் S.லீலாவதி உதவிச் செயற்பொறியாளர் அவர்களின் தந்தை திரு.P.T.சுப்பையா அவர்கள் 25.04.2013 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## UN Water Award to CEC

Congratulations to Founder Mentor. The Tamil Nadu Engineering Association congratulate Shri.Vibhu Nayar, I.A.S. for his nobel service and guidance. Only with his guidance it has been possible to get UN Award to CEC.

We heartfully willing to co-operate with his team in future activities.

# THE HINDU - 28.03.2013

**UN award for water conservation group**

**Centre for Excellence for Change has been striving for food and water security since 2004**

K. Lakshmi

**CHENNAI:** It began as a modest experiment by a group of water professionals back in 2004. Their aim then, was to improve water service delivery and achieve sustainable and equitable water supply.

Today, this has blossomed into a movement of building sound water management practices and more collaborative social relationships among all stakeholders in the water sector.

The Centre of Excellence for Change (CEC), whose genesis is tracted to the group, has been given the United Nations Water for Life Best Practices Award 2013.

It was ranked second in the category - 'best participatory, communication, awareness raising and education practices' for the award.

Instituted two years ago by UN Water, the United Nations' coordination mechanism for all water-related issues, the award is given as a mark of recognition of best practices adopted to ensure sustainable management of water resources.

The CEC, which has been striving for water and food security in villages, was chosen from nearly 50 applicants from various countries. It will receive the award during World Water Day celebrations next year.

Members of the CEC, a broad umbrella for professionals from various departments related to water and food sectors, said are able to reach out to the community, thanks to attitudinal and behavioural changes, initially, among themselves, towards adopting water management practices.

Given their objective, the members spend a great deal of their time and energy in rural parts of the State. But they do not overlook Chennai and its needs. On World Water Day (March 22), these officials of eight different government departments, volunteered to create awareness about water conservation in the city.

The CEC's founder mentor Vibhu Nayar said that from just five persons in the Tamil Nadu Water Supply and Drainage Board, the volunteers have grown to over 2,500 persons.

The focus is now on creating awareness and a participatory approach among village residents to conserve resources, adopt crop diversification and in turn increase agricultural income. The Centre has covered 20 districts so far in the State. It also assists other states, including Rajasthan, Karnataka and Jharkhand, he said.

**GOVERNMENT OF TAMIL NADU**

Personnel and Administrative
Reforms (S) Department,
Secretariat, Chennai - 600 009.

**Letter No.23373/S/2011-2, Dated 09.08.2011**

From

Thiru. M.Kutralingam, I.A.S.,
Principal Secretary to Government.

To

All Principal Secretaries/Secretaries to Government, Secretariat, Chennai - 9.
All Heads of Departments including District Collectors/District Judges and Chief Judicial Magistrates.
The Registrar, High Court, Chennai - 104.
The Secretary, Tamil Nadu Public Service Commission, Chennai - 2.
The Accountant General, Chennai - 18/9/35.
The Pay and Accounts Officer, (North)/(South)/(East), Chennai - 79/35/5.

Sir,

Sub: Public Service - Advancement to Selection Grade / Special Grade - Counting the service rendered in identical / higher scales for awarding Selection Grade / Special Grade in the Tamil Nadu Revised scales of pay after 01.01.2006 - Clarifications - Issued.

Ref: 1. G.O.Ms.No.210, Personnel and Administrative Reforms (S) Department, dated 11.08.87.

2. Letter No.32/S/1996-1, Personnel and Administrative Reforms (S) Department, dated 26.09.97.

3. Letter Ms.No.168, Personnel and Administrative Reforms (S) Department, dated 28.09.99.

4. G.O.Ms.No.234, Finance (PC) Department, dated 01.06.2009.

In the Government Order first, second and third cited, orders have been issued to the effect that the services rendered in the Selection Grade / Special Grade of the lower post shall be counted for awarding Selection Grade in the higher post if the scale of pay of the Selection Grade / Special Grade of the lower post and that of the higher post are identical / higher.

2. In the revised pay scales implemented with effect from 01.01.2006, no separate scales of pay have been provided for Selection Grade / Special Grade posts. Only one increment equal to three percent of the basic pay including grade pay in the same pay band is allowed to the employees on award of Selection Grade / Special Grade. Therefore, the question of counting the services rendered in the Selection Grade / Special Grade of the lower post for awarding Selection Grade / Special Grade in the promotion post does not arise. Hence the orders issued in the Government Order / Letters first to third cited cannot be made application in the revised scales of pay implemented with effect from 01.01.2006.

3. This letter issues with the concurrence of Finance (PC) Department, vide its U.O.No.39533/PC/2011-1, dated 01.08.2011.

Yours faithfully,
Sd/-
for Principal Secretary to Government.

## அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றம்

அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் 22வது தேசிய பொதுக்குழுக் கூட்டம் 21, 22.04.2013 ஆகிய தேதிகளில் புதுடெல்லியில் நடைபெற்றது. முக்கிய பொறுப்புகளுக்கு கீழ்கண்ட பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி.சத்னாம் சிங் டோனா<br>பஞ்சாப் |
| மூத்த துணைத் தலைவர் | : | பொறி. சிவானந்த உகர்<br>கர்நாடகா |
| தலைமைப் பொதுச் செயலாளர் | : | பொறி.ஆர்.கே.சிங்<br>உத்திரபிரதேசம் |
| கூடுதல் பொதுச் செயலாளர் | : | பொறி. யஷ்பால் துல்<br>ஹரியானா |
| நிதிச் செயலாளர் | : | பொறி. ஜி.பி.எஸ்.சவுகான்<br>மத்திய பிரதேசம் |
| மாமன்ற செய்தி மடல் ஆசிரியர் | : | பொறி. டி.ஆர்.காஷ்யாப்<br>இமாச்சல் |
| தெற்கு மண்டல செயலாளர் | : | பொறி.வி.வி.சிதம்பரம்<br>தமிழ்நாடு |
| மண்டல செயலாளர்<br>(பொதுத் துறை நிறுவனங்கள்) | : | பொறி. பீதாம்பரசுவாமி<br>கர்நாடகா |

பிற பொறுப்புகளுக்கு பலரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய பொறுப்பாளர்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

---

## உழைப்பு

மக்களுக்கு உழைத்திடு
  மகேசனாய் வாழ்ந்திடு
வாழ்வில் நேர்மை
  வாக்கில் உண்மை
சேர்த்திடு நற்பெயரை
  நிலைத்திடும் உன் பெருமை
மண்ணை விட்டு நீ மறைந்தாலும்
  தன்னலமற்ற உன் தொண்டு - இப்பூலகில்
என்றும் நிலைத்திருக்கும்
  மங்காத புகழுடன்
வெற்றிகள் சிகரம் எட்டும்
  நீ நம்பிக்கையுடன் உழைத்தால் மட்டும்
அன்புத் தொண்டே மகிழ்வின் அச்சாணி
  கருணை மனமே வாழ்வின் உச்சாணி

**பொறி.கா.வெள்ளிமலை,**
உதவிச் செயற்பொறியாளர், பொ.ப.து.,
பொருளாளர், புதுக்கோட்டை கிளை.

**அன்பார்ந்த பொறியாளர் சகோதரர்களுக்கு,**

நான்கு மூத்தப் பொறியாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை சம்பந்தமாக பொறியியல் கதிரில் எதுவும் எழுதக் கூடாது, அது நாகரீகமாக இருக்காது என்று நினைத்திருந்தோம். ஆனால் எழுத வேண்டிய கட்டாயத்தை சில "பிரச்சார பீரங்கிகள்" உருவாக்கிவிட்டார்கள்.

முதல் கட்டமாக இவர்கள் TNEA மையச் சங்க பொறுப்பாளர்களிடையே கருத்து வேறுபாட்டை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டார்கள். ஆனால் மையச் சங்க பொறுப்பாளர்கள் வெளிப்படையாக மனம்விட்டு பேசி அவர்கள் சதியை முறியடித்தோம். அடுத்து TNEA-வை சேர்ந்த பலருடன் இவர்கள் பேசி கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கவர்ச்சியாக பேசி பேசியே கரைப்பவர்கள். அதுவுமில்லாமல் பெருமன்ற செய்தி மடலில் இதுபோன்ற சர்ச்சைக்குரிய பல விஷயங்கள் நிறைய முறை இடம் பெற்றிருக்கும். தற்போதும் இந்த நான்கு மூத்தப் பொறியாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை பற்றி எழுதியிருக்கிறார்கள். எனவே உறுப்பினர்கள் உண்மை நிலையை அறிய வேண்டும் என்பதற்காக எழுத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்த நடவடிக்கை மூத்தப் பொறியாளர்களிடையே உள்ள ஒரு தரப்புக்கு ஆதரவாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று சிலர் பொய் பிரச்சாரம் செய்கிறார்கள். இது மிகவும் வருத்தத்திற்கும், கண்டனத்திற்கும் உரிய செயலாகும்.

எல்லாருக்கும் தெரிந்த ஒரு கதை. ஒரு குழந்தைக்கு இரண்டு தாய்மார்கள் உரிமை கொண்டாடுகிறார்கள். அமைச்சரின் ஆலோசனையின் பேரில் அரசர் குழந்தையை இரண்டாக வெட்டி ஆளுக்கொரு பகுதியை கொடுத்துவிட தீர்ப்புக் கூறினார். உடனே உண்மை தாய் பதறிப்போய் அந்த குழந்தை தன் குழந்தையில்லை. எனவே அந்த குழந்தையை அந்த இன்னொரு பெண்ணுக்கே கொடுத்துவிடும் படி கூறினாள். போலித்தாய் மௌனமாக இருந்தாள்.

இந்த கதையில் வருவதை போல TNEA-வின் உண்மையான தாய்மார்கள் யார்? போலித்தாய்மார்கள் யார்? என்று தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு அருமையான வாய்ப்பு நமக்கு அமைந்துள்ளது. தமிழ்நாடு பொறியியல் சங்கத்தை உயிர் மூச்சாக நினைக்கும் மூத்தப் பொறியாளர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். அவர்களை போற்றுவோம்.

தங்கள் ஈகோவிற்காக TNEA-க்கு எதிராக FORDET-ஐ பொய் பிரச்சாரத்தின் மூலம் திசை திருப்ப பார்க்கிறார்கள் மேலே சொன்ன மாதிரி சில போலி தாய்மார்கள்.

தமிழ்நாடு வேளாண்மை பொறியாளர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் பொறியாளர் எஸ்.பெரியசாமி அவர்கள் "TNEA எனக்கு தாய் DECT எனக்கு தந்தை" என்று அடிக்கடி கூறுவார். தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் பாரம்பரியம் பற்றி தெரிந்தவர்கள், நல்ல பின்னணி உள்ளவர்கள் TNEA-வின் மீது இதுபோன்று அபிமானமாக இருப்பார்கள். ஆனால் FORDET-ல் தற்போது முக்கிய பொறுப்புகளில் உள்ளவர்களுக்கு இதுபோன்ற நல்ல எண்ணம் இல்லை என்று நினைக்கிறோம். அதனால்தான் தங்களுக்குள் உள்ள பிரச்சினையை தங்களுக்குள் தீர்த்துக் கொள்ளாமல் எல்லை மீறி தங்கள் கரங்களை TNEA மற்றும் DECT நோக்கி நீட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். இதுபோன்ற அடாத செயல்களை TNEA போன்ற பலமான சங்கத்தால்தான் தட்டிக் கேட்க முடியும். அதனால்தான் இந்த நடவடிக்கை.

எனவே சகோதரர்களே சில பிரச்சார பீரங்கிகளின் பிரச்சாரத்தை புறந்தள்ளுங்கள். இவர்களுக்கு நிறைய நேரம் இருக்கிறது. நமக்கு நிறைய வேலை இருக்கிறது. நாம் நமது வேலையை கவனிப்போம்.

# TNEA இல்ல கட்டிடங்கள் TNEA-விற்கு சொந்தமானவை அல்ல. அரசாங்கத்திற்கு சொந்தமானவை

நான்கு மூத்தப் பொறியாளர்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தொடர்ச்சியாக அந்த நான்கு பேரில் ஒருவர் அராஜகமாக, அநாகரிகமாக கடிதங்கள் எழுதியுள்ளார். அதிலிருந்து சில துளிகள் கீழே.

"தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் உறுப்பினர் அல்ல நான். அவ்வாறு இருக்கையில் என்மீது நடவடிக்கை எடுக்க உங்களுக்கு என்ன (தகுதி) உரிமை உள்ளது?"

"தமிழ்நாடு பொறியியல் சங்க கட்டிடம் அரசுக்கு சொந்தமான கட்டிடம். அதில் நான் நுழைய தடை விதிக்க உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது."

"பேரவை (DECT) நலன் பாதிக்கப்படும் வகையில் நான் நடந்து கொண்டதாக தெரிவித்துள்ளீர்கள். எந்த வகையில் நடந்து கொண்டேன்? பேரவையில் நீங்கள் பொதுச் செயலாளரா?"

"உங்கள் கடிதத்தைப் படிக்கும் போது நீங்கள் (த.நா.பொ.சங்கம்) தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை, ஏதோ DECT உறுப்பினர்களுடன் சேர்ந்து கூட்டுச் சதி செய்து செய்துள்ளீர்கள்?"

"உங்கள் மையச் சங்க பொறுப்பாளர்கள் 09.03.2013 அன்று கூடி, மேற்கண்ட நடவடிக்கை எடுக்க, எந்த வகையில் உங்களுக்கு வானளாவிய அதிகாரம் வழங்கப்பட்டது?"

"தலை இல்லாமல் "முண்டம்" கூட்ட நடத்த முடியுமா. தலைவர், துணைத் தலைவர், பொதுச் செயலாளர் வரக்கூடாது. ஆனால் மற்றவர்கள் வரலாம். இது எந்த ஊர் நியாயம். ஒரு வேலை உங்களுக்கு அவ்வாறு அனுபவம் ஏற்பட்டதோ?"

"மேடை நாகரீகம் இல்லாமல் பேசும் சில மூத்த கிழம்களுடன், துரோகம் செய்வது, அடுத்தவரை உறவாடிக் கெடுப்பது போன்ற செயல்களில் ஈடுபடும் சகுனிகளுடனும் சேர்ந்துக் கொண்டு உங்கள் சங்கத்தை வளர்க்க வேண்டாம்."

"FORDET என்ற அமைப்பு ஓய்வு பெற்ற பொறியாளர்களுக்க உதவி செய்யும் அமைப்பு TNEA பணியில் உள்ளவர்களுக்காக பணிபுரியும் ஒரு குறிப்பிட்ட துறையின் அமைப்பு. ஆனால் FORDET என்பது தமிழ்நாடு அரசில் பல துறைகளிலிருந்து ஓய்வு பொறியாளர்களின் அமைப்பு. TNEA-வையும் FORDET-யையும் சிண்டு முடித்துவிடாதே."

"மூத்தப் பொறியாளர்களின் மதிக்கிறேன் என்று வெளியில் சொல்லிக் கொண்டு மூத்தோரை மிதிக்கக் கற்றுக் கொள்ளாதீர்கள். ஒரு வேளை நீங்கள் உங்கள் வீட்டில் தந்தையையோ அண்ணனையோ மதிப்பதில்லை போல் தெரிகிறது."

அதாவது தமிழ்நாடு பொறியியல் சங்கம் கட்டியுள்ள தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்கள், அரசாங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்களாம். தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு முடிவெடுக்க உரிமை கிடையாதாம். சேலத்தில் தமிழ்நாடு பொறியியல் சங்கம் இல்லத்தில் கீழ்த்தரமாக, தரம் தாழ்ந்த நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள்

மீது, கீழ்த்தரமான செயல்களை செய்து காவல்துறை வரை புகார் சென்ற செயல்களை செய்தவர்கள் மீது, TNEA-விற்கு எதிராக செயல்பட்டவர்கள் மீது தங்கள் சுயநலத்திற்காக, ஈகோவிற்காக DECT-க்கு எதிராக செயல்படுபவர்கள் மீது DECT மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துக் கொள்ள வேண்டாம் என்று இணைப்பு சங்கங்களை வலியுறுத்தி DECT மாநிலச் செயற்குழுக் கூட்டத்தையே முடக்க நினைப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க TNEAவிற்கு தகுதி கிடையாதாம். கடிதம் எழுதிய இந்த நபர் பொதுப்பணித்துறைக்கோ, தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கோ சம்பந்தம் இல்லாதவர். தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்களை தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சொந்தமானது அல்ல அரசாங்கத்திற்கு சொந்தமானது என்று கூறும் இந்த நபரின் செயல் அராஜகமா? அறிவீனமா? கண்டிப்பாக அராஜகம் தான்.

"மேடை நாகரீகம் தெரியாத மூத்த கிழம்" என்று இந்த "வாலிபர்?" எழுதியிருப்பது TNEA, தியாக செம்மல் என்று சொல்லும் ஒரு தலைவரை.

இந்த நபருக்கு நான் பதில் எழுதவில்லை. இந்த கடிதம் பதில் அளிக்கக் கூடிய அளவுக்கு அறிவு பூர்வமான, தரமான, தகுதியான கடிதம் இல்லை. இந்த நபரை இதுவரை நான் ஒருமுறைக் கூட பார்த்ததில்லை.

மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்ட நால்வரில் இருவர் பெருமன்ற செய்தி மடலில் TNEAவிற்கு அதை செய்தேன், இதை செய்தேன் என்று எழுதியிருக்கிறார்கள். அதில் சில தவறான தகவல்கள். சில மிகைப்படுத்தப்பட்டவைகள். உண்ணாவிரதத்தில் கலந்துக் கொண்டேன். TNEA கூட்டங்களில் கலந்துக் கொண்டேன் என்று எழுதியிருக்கிறார்கள். DECT-ல், AIFODE-ல் இவர்களை பொறுப்பாளர்களாக, ஆலோசகர்களாக போட்டது. இந்தியா முழுவதும் உள்ள ஊர்கள், இலங்கை ஆகியவற்றிற்கு விஜயம் செய்வதற்கு மட்டும் அல்ல இதுபோன்ற சில வேலைகளும் செய்வதற்கும் தான். இது இவர்களின் கடமை.

ஊசி முனை அளவு நல்லது செய்துவிட்டு அதை உலகளவு ஊதி பெரிதாக்கி சுய விளம்பரம் செய்துக் கொள்வது இவர்களின் வழக்கம். பல உதாரணங்கள் சொல்லலாம். இப்படி செய்திருக்கிறோம், அதனால் நாங்கள் என்ன செய்தாலும் எங்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று சொல்ல வருகிறார்களா?

திரு.டி.வி.கோமதிநாயகம் அவர்கள் "TNEA பொதுச் செயலாளரை சிலர் கருவியாக பயன்படுத்தி இருக்கிறார்கள்" என்று எழுதியிருக்கிறார். இது மிகவும் வருத்தத்துக்குரியது விஷமத் தனமானது. கருவியாக பயன்படுத்த முயற்சிப்பது, சாணக்கிய தனமாக வேலைகளை செய்வது யார் என்பது எங்களுக்கு தெரியும். இதற்கு பல உதாரணங்கள் சொல்லலாம். பல அதிரடி ஆதாரங்கள் உள்ளது. இவரின் இன்னொரு பக்கத்தை அறிந்தவன் நான்.

TNEA பல முக்கிய பிரச்சினைகளுக்காக உயிரை கொடுத்து போராடிக் கொண்டிருக்கிறது. DECT பல பிரச்சினைகளுக்கு போராடிக் கொண்டிருக்கிறது. ஆனால் FORDET-க்கு என்ன பிரச்சினை இருக்கிறது?

இவர்கள் தரப்பின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதிர் தரப்பினருக்கு வெற்றியாக போய்விடுமோ? என்ற ஈகோவினால் உந்தப்பட்டு தவறான செயல்களில் ஈடுபடுகிறார்கள். இவர்களின் எதிர் தரப்பு இதுபோன்ற செயல்களை செய்திருந்தால் அவர்கள் மீதும் இதுபோன்ற நடவடிக்கைதான் எடுத்திருப்போம்.




# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபஸ்ரீ விஜய ஆண்டு சித்திரை மாதம் 30-ம் நாள் (13.05.2013) திங்கட்கிழமை திரிதியை திதி, மிருகசீரிட நட்சத்திரம் அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 6.00 மணிக்குமேல் 7.30 மணிக்குள் ரிஷப லக்கினத்தில்


கிருஷ்ணகிரி மாவட்டம், கீழ்பையூர் தெய்வத்திருவாளர்கள். பரசுராமன்-தங்கம்மாள் அவர்களின் மகன்வழி பேரனும், திரு.M.தங்கவேல்-தெய்வத்திரு. தங்கமணி அவர்களின் மகள்வழி பேரனும், திரு.ப.நாகராஜ்-கலை அரசி அவர்களின் குமாரனுமான திருவளர்ச்செல்வன்



**நா. பாலசுப்ரமணியம்,** B.E., (Aero) M.B.A.,

(Indigo Air Lines, Chennai)

என்கிற மணமகனுக்கு



தருமபுரி மாவட்டம், ஏலகிரியான்கொட்டாய் தெய்வத்திருவாளர்கள் பெரிச்சிகவுண்டர்-முத்துவேடியம்மாள் அவர்களின் மகன்வழி பேத்தியும், தெய்வத்திரு.பொன்னுசாமி-அலமேலு அம்மாள் அவர்களின் மகள்வழி பேத்தியும், திரு.பெ.பெரியண்ணன்-கீதாராணி அவர்களின் இளைய குமாரத்தியுமான திருவளர்ச்செல்வி

**பெ. சோபனா,** B.E., (E.C.E.,) M.B.A.,

(Chectronics, Dharmapuri)

என்கிற மணமகளை

இல்வாழ்க்கை துணைவியாக்க பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு இத்திருமணம் தருமபுரி, S.V.ரோடு, **ஓம் M.R.காளியம்மாள் திருமண மண்டபத்தில்** நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.



**தங்கள் அன்புள்ள,**
**Er. ப. நாகராஜ், B.E.,**
இளநிலைப் பொறியாளர், பொ.ப.து./நீ.ஆ.அ.
பாம்பன் அணை,
ஊத்தங்கரை.

# திருமண அழைப்பிதழ்

பேரன்புடையீர், வணக்கம்!

நிகழும் மங்களகரமான விஜயஸ்ரீ சித்திரை மீ. 30-ம் நாள் (13.05.2013) திங்கட்கிழமை மிருக சீருஷ நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 6.00 மணிக்குமேல் 7.30 மணிக்குள் ரிசப லக்கினத்தில்

நாகப்பட்டினம் மாவட்டம், வெளிப்பாளையம்,
தெய்வத்திரு.மு.மீனாட்சி சுந்தரம்பிள்ளை
அவர்களின் பேரனும்
வெளிவைமீ.பக்கிரிசாமி அவர்களின்
மகனுமாகிய திருவளர்ச் செல்வன்

**P. அருண்,** B.E.,

திருவாரூர் மாவட்டம்,
தெய்வத்திரு.N.P.சோமசுந்தரம்பிள்ளை
அவர்களின் பேத்தியும்
திருமிகு.S.ரவிச்சந்திரன் அவர்களின் மகளுமாகிய
திருவளர்ச்செல்வி

**R. சத்யா(எ)மகாலட்சுமி,** B.Com.,

ஆகியோரது திருமணம் பெரியோர்களால் நிச்சயித்த வண்ணம், திருவாரூர், தெற்குவீதி **A.K.M. திருமண மண்டபத்தில்** நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறோம்.

**தங்கள் அன்புள்ள,**
**Er. மீ. பக்கிரிசாமி,**
உதவிச் செயற்பொறியாளர், பொ.ப.து.,
கட்டிட கட்டுமானம்&பராமரிப்பு உட்கோட்டம்,
திருவாரூர்.

---

## MEMBERSHIP NUMBERS FOR THE NEW MEMBERS

| M.No | Name | Designation | Date of Birth | Branch |
|---|---|---|---|---|
| 4286 | P. Mahalingam | J.E | 15.11.58 | Dharmapuri |
| 4287 | S. Asokan | W.I | 15.07.65 | Dharmapuri |
| 4288 | G. Mahendran | I.A | 12.05.74 | Dharmapuri |
| 4289 | C. Krishnan | W.I | 25.07.74 | Trichy |
| 4290 | B. Ananthakumar | W.I | 03.06.75 | Trichy |

The Members who were not allotted membership numbers, please contact your branch office bearers with your date of birth.

**Er. K. Kamaldeen,**
Secretary (Organisation & Legal)

Under Postal Regd No. TN/CH/(C)/358/12-14 & TN/PMG (CCR) WPP No.308/2012-14 MAY 2013
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

# மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்

1997 ஆம் ஆண்டு முதல் சுமார் 300 இளநிலைப் பொறியாளர்கள் பணிவரன்முறை (Regularisation) செய்யப்பட தடையாக இருந்த இரண்டு வழக்குகளில் ஒரு வழக்கு கடந்த 22.04.2013 அன்று விசாரணைக்கு வந்து தள்ளுபடி செய்யப்பட்டு வழக்கு முடிவுக்கு வந்துள்ளது. உடனடியாக மேற்கண்ட இளநிலைப் பொறியாளர்களை பணிவரன்முறை செய்ய நீதி மன்றம் ஆணையிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

- தமிழ்நாடு பொறியியல் சங்கம்

நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி: பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை – 600 005.

முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Published on 3.5.2013 Posting on 6.5.2013
REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY: Er. D. MURUGESAN., D.C.E., B.Tech., GENERAL SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PUBLISHED BY: Er. S. KANNAN, D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. K.P.THIYAGARAJAN AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5 PHONE 2854 8223